1509

M. 1630. AUGUST. 1923.

சுயம்பிரகாசத்துணை.

ஸம்ஷுல் மஹறிபா என்னும்

# ஞானசூரியன்

இது ஒரு நிகரில்லாத இனிய மாத சஞ்சிகை.

# GNANA SURIYAN

A HIGH CLASS TAMIL MONTHLY.


| மலர் 2 | ருத்ரோற்காரிஸு ஆவணிமீ 1வ<br>1923ஸு ஆகஸ்டுமீ 17வ | இதழ் 5 |
|---|---|---|

Vol. II. No. 5.


பொருளடக்கம்.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| கடவுள் வணக்கம் | 97 |
| அடியாரிலக்கணம்—ஞானக்களஞ்சியம் | 98 |
| அடியார் நிந்தை—மணிமுத்துநாயகம் | 102 |
| சீடரிலக்கணம்—வேதாந்த பாஸ்கரன் | 105 |
| மதுபானம்—ப. வீரப்பத் தஞ்சவராயன், கருவேலி. | 109 |
| சிபிச்சக்ரவர்த்தி—காரைச் சிவனடியார் | 112 |
| ஆணிமாண்டவியர் ஷை | 114 |
| செத்தவள் பிழைத்தது—(விரிவாக) | 115 |
| ஸ்வராவளி—அன்பன் | 116 |
| வைத்தியம்—க. ஞானபூபதி | 117 |
| தாம்பூலத்தின் குணம்—க. ஞானபூபதி | 119 |
| ஓர் அபூர்வமான விவாகம்—(நா. மித்திரன்) | 120 |


இப்பத்திரிகையிலுள்ள விஷயங்களை பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்க அருகரல்லர்.

## "ஞான சூரியன்"

### சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, பர்மா, சிலோன்முதலிய இடங்களுக்கு | வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட | ரூ 1—8—0 |
| பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு | | ரூ 2—0—0 |
| தனி சஞ்சிகை விலை | | ரூ 0—3—0 |

மாதிரிப் பிரதி வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் உடனே இனாமாக அனுப்பப்படும்.

சந்தாதாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி. பி. யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலாமேனும் முன் பணம் அனுப்பி விடுவதே உத்தமம். ஏனெனில் மணியார்டர் செய்தால் ரூ. 1—8—0. வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அசனுல் தங்களுக்கு 3 அணு சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய் எழுதப்பட்டுவருவதால் யாவரும் ஆரம்பத்திலிருந்தே சேர்ந்து வருகிறார்கள், சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரை-மீ முதல்கொண்டு பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாரராய்ச் சேருபவர்களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்பப்படும்.

---


### விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒருமாசத்திற்கு | ... | ரூபா | 7—0—0 |
| அரை பக்கத்திற்கு | ,, | ,, | 4—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ,, | 2—8—0 |

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொத்தத் தொகையில் 100-க்கு 12½ ரூ வீதம் கழித்து வாங்கப்படும். எப்போதும் முழுதொகையை முன்பணமாயனுப்பவேண்டும், நீடித்த விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.


### விஷயங்கள்.

1. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் தெளிவாய் எழுதியனுப்பினாலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற்றை வெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு, பதில் தெரிய விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவும்.

முன்பணமாக ரூபாய் 25 (இருபத்தைந்து) செலுத்தும் ஜீவிய சந்தாதாரர் (Life Subscribers) கட்கு எக்காலத்திலும் பத்திரிகை இனாமாய் அனுப்புவதுடன் அவர்கள் பெயரை ஒவ்வொரு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பெறும்.


கருணையானந்த ஞானபூபதி,
பத்திராதிபர், ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம், திருவாரூர்.

சுயம்பிரகாசத்துணை.

ஸம்ஷால் மஹாறிபா என்னும்

# ஞானசூரியன்.

இது ஒரு இனிய மாதாரம்பத் தமிழ்ப் பத்திரிகை.

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

மலர் 2.] ருத்ரோற்காரி௵ ஆவணி௴ 1௳. [இதழ் 5.

## கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
    தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
    நானிலத் துதித்தமா னிடர்கள்
ஊனெனு மகந்தைக் காரிருட் படலம்
    கலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
    சோதியைப் பேரதெலாக் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

உரையால் நினைவால் அருள்நோக்கால் உலக குணர்வைப் பிணித்தமல
இருளா ணதனை அறமாற்ற எழுந்த ஞான சூரியனே. (பிரபுலிங்கலீலை)

அறிவாகி யானந்த மயமா மென்று
    மழியாத மலையாகி யாதின் பாலும்
பிறியாமற் றண்ணருளே கோயி லான
    பெரியபரம் பதியதனைப் பெறவே வேண்டி
நெறியாகக் கூறுவன்கே ளெந்த நாளு
    நிற்குணநிற் குளம் வாய்த்து நீடுவாழ்க
செறிவான வறியாமை யெல்லா நீங்க
    சித்சுகம்பெற் றிடுகவந்தந் தீர்க வென்றே.

(தாயுமான வள்ளல்.)

# ஞானசூரியன்

இது ஒரு நிகரில்லாத மாத சஞ்சிகை.

## அடியாரிலக்கணம்.

(81-ம் பக்கத் தொடர்ச்சி.)

### திருமந்திரம்.

திகைக்குரி யானொரு தேவனை நாடும்
வகைக்குரி யானொரு வாதி யிருக்கிற்
பகைக்குரி யாரில்லை பார்மழை பெய்யும்
அகக்குறை கேடில்லை அவ்வுல குக்கே.

### மூதுரை.

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் — தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டால்
எல்லார்க்கும் பெய்யு மழை.

இத்தகைய மகத்துவம் வாய்ந்த மகான்களுக்கு ஒருவன் அன்புடன் ஒருவேளை அமுதபடைத்து உபசரிப்பானேயானால் அதனாலுண்டாகும் பிரயோசனம் இவ்வளவு அவ்வளவு என்று எவராலும் வரையறுத்துச் சொல்லுவதரிது.

### திருமந்திரம்.

தண்டறு சிந்தைத் தபோதனர் தாமகிழ்ந்
துண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென்
றெண்டிசை நந்தி யெடுத்துரைத் தானே.

உலகமுழுவதையும் போர்த்திருந்த பனிப்படலமானது, விண்மணியாகிய சூரியப் பிரகாசத்தைக் கண்டவுடன் வெளிவாங்கி மறைந்துபோகும். அதுபோல் மெய்ஞ்ஞானிகளாகிய சத்துக்கள் உண்ட மிச்சிலாகிய பரிகலச் சேடத்தை ஒருவன் பெறுவதரிது. அவனது தபோபலத்தினால் கிடைக்கப்பெற்று அதைப் புசித்த மாத்திரத்தில் அவனது தீவினைகளெல்லாம் நசித்து, உதிர்ந்துபோன இலைகள் திரும்பவும் மரத்திற் போய்ச் சேர்ந்து வாழாததுபோலவும் கறந்தபால் மீண்டும் முலைக்கண் வழியே புகாததுபோலவும் அந்தத் தீவினைகள் திரும்பவும் இவனை வந்து அணுகாது. இதற்குத் திருட்டாந்தம் பின்வருஞ் சரித்திரத்தால் அறியலாம்.

பொன்னிமாநதி மன்னிநீழலிற் பன்னலந்தரும் சென்னிநாட்டில் நிலவளமுதலிய பல வளங்களும் நிறைந்த செல்வத் திருவாரூரின்கண் ஓடம்போக்கி யாற்றின் கரைக்கு வடபாலில் நபோமணியைப்போல் விளங்கும் மடப்புரம் என்னும் புண்ணிய பூமியில் கலியுகாதி (௪௯௩௬)-ல் மன்மத வருடம் ஆவணி மாதம் உத்தர நக்ஷத்திரமாகிய சுபதினத்தில் சச்சிதானந்த பரிபூரண வியோமாதீத பிரம கைவல்லியத்தை யடைந்த கருணாநிதியாகிய ஸ்ரீ குருதேக்ஷிணாமூர்த்தி வள்ளல் அவர்கள் உலக சஞ்சாரஞ்செய்து வருங்காலத்தில் ஒருநாள் இரவில் விராலிமலைக்குச் சென்றிருந்தபோது பெருமழை பெய்ய அதற்காக ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் ஒரு தாசிவீட்டுத் திண்ணையில் ஒதுங்கியிருந்தது. சுவாமிகள் பசியோடிருப்பதை விராலிமலை முருகக்கடவுள் அறிந்து, அர்த்தசாமத்தில் தனக்கு நிவேதனமாகிய சர்க்கரைப் பொங்கலைத் தாம்பாளத்தோடு எடுத்துக்கொண்டு ஒரு சிறிய பிராமணப் பிள்ளையைப்போல் வந்து, அப்பா! என்று கூவி இவ்வன்னத்தைப் புசியென்று கொடுத்துவிட்டு மறைந்தருள. சுவாமிகள் அவ்வன்னத்திற் சிறிது புசித்து எஞ்சியதை புதுக்கோட்டை தாசில்தாருக்குக் கொடுக்க கிறுகிறு என்றிழுத்துக்கொண்டிருந்த காசநோயும் ஒருத்தலைநோயும் நீங்கிற்று. மேலும் சித்தூர் ஜில்லாவிலுள்ள சோமநாத முதலியார் என்னும் தனவந்

தார் பல ஔடதங்களாலும் நீங்காத குன்ம வியாதியால் பீடிக்கப்பெற்று சிதம்பரம் நடராஜா சன்னிதியில் பிராணத் தியாகஞ் செய்ய அர்த்தசாம வேளையில் எத்தனிக்கும்போது, நடராஜப் பெருமான் அசரீரியாக 'இக்குன்மநோய் திருவாரூர் தெக்ஷிணாமூர்த்தியால் நீங்கும்' என்று சொல்ல, அங்ஙனமே சோமநாத முதலியார் திருவாரூருக்கு வந்து சுவாமிகளைத் தேடிக் கண்டுற்று அடியற்ற மரம்போல் விழுந்து நமஸ்கரித்து பயபக்தியுடன் கைகட்டி வாய்பொத்தி நின்றார்.

அதுகண்ட சுவாமிகள் முதலியாரை நோக்கி, 'உன்னை நடேசன் அனுப்பினனோ!' எனத் திருவாய்மலர்ந்தருளி ஒரு வீட்டுவாயலிற் கிடந்த பரிகலத்திலுள்ள அன்னத்தை ஞமலிகளோடு தானும் புசித்துக்கொண்டிருந்ததில், சில அன்னத்தை முதலியார் வாயிலிட்டு உட்கொள்ளும்படி செய்தனர். உடனே நீண்டகாலமாய் முதலியாரை வருத்திக்கொண்டிருந்த குன்ம நோய் நீங்கப்பெற்றது. இதனை ஸ்ரீலஸ்ரீ தெக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் சரித்திரத்தில் விரிவாய்க் காணலாம்.

### பிரபுலிங்கலீலை.

தொழிலான் முயன்று நுகர்வமெனிற் றுயரொன் றுயிர்க்கு விளையுமென
வொழியா வமல சாமூர்த்தி யுண்ட மிச்சில் நுகர்வமெனிற்
பழியா துயிலை யகன்றுபோம் பவமு மென்னப் பிரசாதக்
குழியா னதனை யகலாமற் கொண்டிங் கிருந்தான் குணமிக்கான்.

தாய்க்கு வழுவின் மகவிற்குத் தந்தை தனக்குப் பசுவிற்குச்
சேய்க்கு மறையோர் தமக்கிடர்செய் தீர்வில் கொடிய பாதகமும்
போக்கு மிமைப்பிற் கரணத்தைப் புனித மாகிச் சிவமாக
ஆக்கும் அரன்றன் பிரசாத மாயி னதற்கு நிகருண்டோ.

முன்னொரு காலத்தில் கும்பகோணத்துக் கடுத்த மத்தியார்ச்சுனம் என்னும் திருவிடைமருதூருக்கு அருகாமையிலுள்ள ஒரு தோப்பில் சந்திரசேகர சுவாமிகள் தமது சீடராகிய திரியம்பகருடன் ஒருசமயம் அமர்ந்திருந்தனர். அவர் திரியம்பகருக்கு ஏற்கனவே வேதமுடிவிற் சிறந்த உட்பொருளாகிய உபநிடத மகா வாக்கியத்தை உபதேசித்திருந்தார். அவ்விதமிருக்

கத் தான் ஒருநாள் பரிபூரணம் அடையுஞ்சமயத்தில் திரியம் பகரை ஒரு ஓலையும் எழுத்தாணியும் கொண்டுவரச் செய்து அதன்பின் தாகத்துக்கு ஜலம் கொண்டுவரும்படி ஆக்ஞாபித்து அனுப்பிவிட்டு, சந்திரசேகர சுவாமிகள் திரியம்பகர் வாசித் துணரும் பொருட்டு ஒரு ஓலையில் ஒருசெய்யுளை எழுதிவைத்து திரியம்பகர் வருவதற்குள் பரிபூரணம் அடைந்துவிட்டார். அந்த ஓலையை, அவ்விடத்தில் நின்று தமது சாமான்களை யேற்றிச் செல்லும் கழுதைகளை மேய்த்துக்கொண்டிருந்த ஒரு கூத்தாடிப் பெண் எடுத்துப் பார்க்கப் புதிதாயும் அழகாயு மிருந்ததால் முற் காலத்தவர்கள் வழக்கப்படி அதைச் சுருட்டி தன் காதில் ஆப ரணமாக அணிந்துகொண்டாள். இதைக் கொஞ்சதூரத்தில் வரும்போதே பார்த்துக்கொண்டுவந்த திரியம்பகர், சமீபத்தில் வந்து தமது குருநாதன் பரிபூரண மடைந்ததைக் கண்ணுற்று அடங்காததுக்கமடைந்து, அவருக்குச் செய்யவேண்டிய கிரியை களைச் சரிவரச்செய்து முடித்தானபின் தனக்கு முடிவாகச் சொல்லவேண்டிய இரகசியங்கள் அடங்கிய ஓலையைக் கூத்தாடிப் பெண் எடுத்துப்போய்விட்டனள் எனவுணர்ந்து, அடடா! இந்த ஓலையில் நமக்காக என்ன இரகசியார்த்தத்தை யெழுதிவைத்துப் போயினரோ! தெரியவில்லையே! அந்த ஓலையை நாம் எவ்விதத்தி லாவது வாங்கிப் பார்க்கவேண்டும். ஆனால் அவளுடைய மன வருத்தம் வராதபடி நன்மையாக நடந்து வாங்கிப் பார்க்கவேண் டுமேயன்றிப் பலாத்காரமாகவாவது அல்லது அவளை வஞ்சித்தா வது நாம் வாங்கினால், அதில் எழுதியிருக்கும் விஷயங்கள் நமக் குச் சித்திக்காவென்றெண்ணி, அவளிடம் கழுதை மேய்க்கும் ஊழியத்தைப் பெற்று, அவள் கூடவே கூத்தாடுமிடங்களுக்கும் போய்க்கொண்டிருந்தனர்.

அக்காலத்தில் அந்த நாட்டையாளும் அரசனுக்கு புத்திரப் பேறு இல்லாதிருந்ததால் வேதியர்கள் வரவழைத்துத் தன்னு டைய குறையைச் சொல்லிக்காட்டி, இதற்கென்ன செய்யலாம்?

(இன்னும் வரும்)

ஞானகிகளஞ்சியம்.

## அடியார் நிந்தை.

(60-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

சோணசைல மாலை.

'குலத்தினிற் பிறந்தும் அலகில்நூல் கற்றுங்
குணத்தினிற் சிறந்துநல் விரத
பலத்தினிற் கவர்ந்தும் நின்னடி யவர்க்குப்
பரிவிலார் கதியிலா தவரே.' எனவும்

தாயுமான வள்ளல்.

"அன்பர்பணி செய்யஎன்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே."

எனவும் திருவாய்மலர்ந்தருளியுள்ள அமுத வாக்கியங்களையுணர்ந்து, அவர்களுக்குத் திரிகரண சுத்தியாகத் தொண்டுபூசைஞ் செய்து மகான்கள் பிரயாசைப்பட்டு சம்பாதித்த அருமையான பிர்ம்ம நிஷ்டையை அவர்கள் கருணைகூர்ந்து சொல்லக்கேட்டு அனுஷ்டித்து மெய்ஞ்ஞானியாவார்கள்.

தாயுமான வள்ளல்.

கற்றும் பலகேள் விகள்கேட்டும் கறங்கெனவே
சுற்றுந் தொழில்கற்றுச் சிற்றின்பத்தூடு சுழலிலென்னுங்
குற்றங்குறைந்து குணமே லிடுஅன்பர் கூட்டத்தையே
முற்றுந் துணையென நம்புகண்டாய்சுத்த மூடநெஞ்சே.

பட்டினத்தடிகள்.

அடியாருறவும் அரன்பூசை நேசமும் அன்புமன்றி
படிமீதில் வேறு பயனுளதோபங் கயன்வகுத்த
குடியான சுற்றமுந் தாரமும்வாழ்வுங் குயக்கலங்கள்
தடியாலடியுண்ட வாறொக்கு மென்றினஞ் சார்ந்திலரே.

சில அவிவேகிகள் மகான்களிடத்தில் ஏதாவது கொடிய குற்றங்குறைகள் இருக்கின்றனவா! வென்று ஆராய்ந்து நன்மையானதைத் தமது அந்தக்கரண சுத்தியில்லாத பிராந்தியால் தீமையென்றெண்ணிப் பலரிடத்திலும் சொல்லித் தூற்றியலைவார்கள். மேற்கூறிய புகழ்ச்சியினாலும் இகழ்ச்சியினாலும் மகான்களது

இருவினைகள் நீங்கி விடுகின்றனவேயன்றி வேறில்லை. அஃதெப்படியெனில், மகான்கள் தனது ஊழ்வினையை யனுபவிக்குங் காலத்தில் தன்னை யறியாமற்செய்த புண்ணிய பாவங்கள் மறுமைக்குத் தொடராதபடி, நல்லவர்கள் மகான்களைத் தொழுது அவர்கள் செய்த புண்ணியத்தையும்; சிலர் நல்லவர்களைப்போல் வெளித்தோற்றத்திற்குப் போய் நாடகம் நடித்துப் பாசாங்கு செய்து (ஞமலிக்கு எச்சில் எலும்பைக் கடிப்பதிலேயே ஞாபகமிருப்பதுபோல்) ஆஷாடபூதிகளாகிய இருகால் ஞமலிகள் மகான்களிடத்திலுள்ள குற்றங்களையே ஆராய்ந்து இகழ்ந்து பாவங்களையும் மூட்டையாகக் கட்டுவார்கள்.

சீறப்புராணம்.

பாரிடைப் பெரியவர் களுக்கிடர் படுத்திடவென்
றோரும் வன்மனத் தவர்களுக் குறுபொரு ளுலகில்
சாருமக்களு மனைவியுந் தாமுந்தம் பொருளும்
வேரொடுங்கெடு மென்பது நிசமென விரித்தான்.

வாயுசங்கிதை.

அழிவிலா யோகந்தான் வல்லுநரைத் தீங்குரைத்தோர் நரகிலாழ்வார்
செழுமனைநல் லாடையுண்டி சேகறுமற் றவர்க்குநன் காச்சிறப்பளித்தோர்
எழுமையுஞ்செய் பாவமெலா மிலகுகதி ரிரவிமுன மிருளேபோல
ஒழியவுயர் வறவுயர்ந்த கதியிலடைந் தின்பமுற்றே யுறைகுவாரே.

வாலைக்கும்மி.

சிவனடி யாரை வேதியரைச் சில
புலவர் ஞானப் பெரியோரை
மௌன மாகவும் வையாதே அவர்
மனது நோகவும் செய்யாதே.

திருக்குறள்.

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

திருமந்திரம்.

ஈசனடியா ரிதயங் கலங்கிடத்
தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகும்நம் நந்தி யாணையே.

### விருத்தாசல புராணம்.

கருக்குழி வேண்டிற் கொல்லும் காலனை வேண்டிற் செக்கில்
நெருக்குண்ண வேண்டில் எந்தன் நேசரை நிந்தை செய்மின்
திருக்கிளர் செல்வம் வேண்டில் திகழ்முத்தி வேண்டில் தொண்டர்
வருக்கமே போற்று மென்று மறைந்தனன் மன்று ளாடி.

### பட்டினத்தடிகள்.

கடுஞ்சொல்லின் வம்பரை யீனரைக் குண்டரைக் காமுகரைக்
கெடும்பவ மேசெய்யும் நிர்மூடர் தம்மைக் குவலயத்துள்
நெடும்பனை போல வளர்ந்தும்நல் லோர்தம் நெறியறியா
இடும்பரை யேன்வகுத் தாய்இறை வாகச்சி யேகம்பனே.

மகான்கள் எப்போதேனும் தனது பசிப்பிணியை நீக்கிக் கொள்ளும் பொருட்டு ஒரு வீட்டில் அன்னம் கேட்கவந்தால் சில அன்பர்கள் ஆர்வத்துடன் அமுதளித்து உபசரிப்பார்கள். இதற்கோர் உதாரணம்:—

திருவாரூருக்கு மேற்கேயுள்ள கோடிபங்கலம் என்னும் கிராமத்தில் வசிப்பவரும், காராளகுல திலகரும், சுப்பராயப் பிள்ளை செய்த அருந்தவப் புதல்வரும், அன்பர் பணிசெய்வதற்காகவே ஒருருவெடுத்துவந்தாற் போன்றவருமாகிய விருத்தாசலம்பிள்ளை அவர்கள் வீட்டுக்கு ஒரு பிராமண சன்னியாசி வந்திருந்தனர். அவர் அக்கினிதேவனை அதிகமாக நட்புக் கொண்டிருந்தபடியால், அவருக்கு அடிக்கடி பசியுண்டாவது சகசமாயிருந்தது. அவர் அன்று காலையில் ஷை பிள்ளையவர்கள் வீட்டில் பழையசோறு காப்பி முதலியவைகளை மனம்போல் புசித்திருந்தும், அகாரணமாகப் பத்துநாழிகை நேரத்திற் கெல்லாம் எனக்கு வயிறு பசிக்கிறது என்றனர். அதற்குப் பிள்ளையவர்கள், சுவாமி! அடுப்பில் கறி (குழம்பு) கொதிக்கிறது. தயவுசெய்து சற்று பொறுங்கள் என்று பணிவுடன் கூறினர். அதுகேட்ட சன்னியாசி கோபத்துடன் அதுவரையில் பொறுத்திருக்க முடியாது போ எனக் கூறிவிட்டு வெளியிற் புறப்படுஞ் சமயத்தில், பிள்ளையவர்கள் அவருக்கு இங்கித வார்த்தைகூறி வேண்டிக் கொள்ள சன்னியாசியும் ஒருவாறு சம்மதித்து அமர்ந்தனர்.

அப்போது பிள்ளையவர்கள் வீட்டுக்கு விருந்தாக வந்திருந்த ஆவூராணி, A. V. மாணிக்கவாசகம் பிள்ளை என்பவர், 'சன்னியாசிக்கு இவ்வளவு கோபம் வரலாமா?' என்னலும்; பிள்ளையவர்கள் அவரை நோக்கி, 'அவ்வாறு கூறவேண்டாம். துறவிக்கு வேந்தன் துரும்பு. என்ற ஆன்றோர் வசனம் இருத்தலாலும், இந்த வீட்டில் அன்னம் இடாவிடின் இன்னொருவீடு இருக்கவே யிருக்கிறது. என்னுந் துணிபு ஏற்பட்டிருத்தலாலும், நம்மை யோர் பொருளாக அவர்கள் மதிக்கவேண்டிய அவசியமேயில்லை. அன்றியும், அவர்கள் மனோரதப்படி குறிப்பறிந்து பசிப்பிணியை நிவர்த்திக்கத் தாமதித்த குற்றம் நம்முடையதே. அன்றியும்,

பிரபுலிங்கலீலை.

விள்ளரு நற்சிவ வேடத் தோர்பொருள்
கொள்ளைகொள் கிற்பினுங் குறைகள் கூறினும்
பிள்ளையை யறுப்பினும் பிழைகள் செய்யினும்
எள்ளுத லிலனெனில் ஈசற் கன்பனும்.

என்று கூறுகின்றதென' அஞ்சி யொடுங்கி நவின்றனராம்.

(இன்னும் வரும்) மணிமுத்து நாயகம்.

---

## சீடரிலக்கணம்.

(23-ம் பக்கத் தொடர்ச்சி.)

வேதாந்தசூடாமணி.

நானார்? இப் பவமெனக்கு வந்தவா றென்கொல்?
நசிப்பதெவ ரால்? என ஆய்ந்தலர் கரங்கொண்டேகி
யானநற் கல்வியறி வடக்கம் வைராகம்
ஆதியாங் குணமுடைச் சற்குருவை யடைந்தெதிர்மண்
ணுறப் பணிந்தெழுந்தன் பாற்கரங்கள் குவித்தே
உறவழுத்தி யருட்குருவே யென்பாசத் தொழிவு
நாணுமெத் திறத்தினு லெனவினவல் சீடன்
தனதுவிதி வசத்துபசன் னத்துவமா மன்றே.

பட்டினத்தடிகளுக்குப் பேய்க்கரும்பு தித்தித்த இடமே முத்திக்கு இடமென்றதுபோல், எந்தக் குருவைக் கண்டால்

சீடனுக்கு மேற்கூறிய பதினெண் குறிகளும் உண்டாகின் றனவோ, அந்தக் குருவே அவனுக்கு ஞானசிரியர்.

மூர்ச்சித்தலும் இறத்தலுமாகிய இரண்டவத்தைகளும் தீவிரதர பக்குவர்களுக்கே யன்றி, ஏனைய பக்குவர்கட்குத் தோற்ருது.

ஞானசிரியர் திருமேனியைச் சீடன் கண்டமாத்திரத்திலே, அன்பென்னும் நதியானது கரைபுரண்டு பெருகி, அவ்வாசிரிய ரைப் பன்முறை வலம்வந்து அட்டாங்க முதலிய வணக்கஞ் செய்து எழுந்து, அஞ்சலிபந்தனம் புரிந்து ஆனந்தக் கண்ணீ ரொழுகத் தோத்திரம்பண்ணி எமது பெருமானே! அடியே னுக்கு இந்தவுடல் எதற்காகக் கிடைத்தது? அதற்குள்ளிருக்கும் நான் யார்? எமக்கு முதலாயுள்ள மெய்ப்பொருள் யாது? என்று அன்பாவலோடு கேட்குஞ் சீடனுக்கே ஞானசிரியர், முன் ஆசிரிய ரிலக்கணத்திற் கூறிய அறுவகைத் தீட்சைகளைப் புரிந்துய்யு மாறு செய்வார்.

**சிவஞான சித்தியார்.**

பரப்பிரமம இவனென்றும் பரசிவன் தானென்றும்
பரஞானம் இவனென்றும் பராபரன் தானென்றும்
அரன்தருஞ்சீர் நிலையெல்லாம் இவனே யென்றும்
அருட்குருவை வழிபடவே அவனிவன் தானுயே
இரங்கியவா ரணமாமை மீனண்டஞ் சினையை
இயல்பினெடு பரிசித்து நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமாபோற் சிவமே யாக்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தானே.

ஆனல் ஞானசிரியர், மாணக்கனது பரிபக்குவ மறிந்து அகண்டாகாரமாகப் பேரின்ப மவுனனந்த வெள்ளம் பெருக் கெடுத்துப் பொங்கித் ததும்பிய காலத்து அவனது சக்திக்குத் தக்கவாறு சீடனை நோக்கி வலியக்கூறுங் காலத்தளவும் சீடன் பணிவிடை செய்துக் காத்திருந்துக் கேட்கவேண்டுமே யன்றி, ஆசிரியரிடம் சீடன் வலியக் கேட்கக்கூடாது. அங்ஙனம், அதைச் சொல்லுங்கள்! இதைச் சொல்லுங்கள்! என்று சுட்டிக்

கேளாமல் மனம் பதைப்பற்றிருந்து, குரு சொல்லக் கேட்பவர்களுக்குத் தானாகவே கொம்பில் பழுத்த பழத்தைப் புசிப்பது போல், ஆனந்த சுகோதயம் உண்டாம்.

ஒழிவிலொடுக்கம்.

தேனுண் டிமிழுந் திறம்போற் சிவானந்த
மோனந் துளும்பி மொழிகாலத்—தேநின்று
தோன்றிருது போலுமொன்றைச் சுட்டாது கேட்பவர்கட்
கான்றதவம் வேத மது

சிவஞான வள்ளல்.

சீடனறி வெவ்வளவோ அவ்வளவுஞ் சிந்தித்துக்
கூடுமுப தேசங்கள் கூறுவா—னீடுபுகழ்
ஊக்கமுடைச் சிராம னெண்ணுதற்கா யன்றெய்தான்
காக்கைக்குத் தக்க கணை.

இவ்வாறு ஞானாசிரியர் மாணாக்கனுக்கு (28)-ம் வயதில் அநுக்கிரகஞ் செய்தல் உத்தமம். (30)-ம் வயதில் அநுக்கிரகஞ் செய்தல் மத்திமம். (36)-ம் வயதில் அநுக்கிரகஞ் செய்தல் அதமம்.

(*) சரற்காலத்து முகிலைக்கண்டு குதூகலித்து நடனமாடும் பசிய கலாபத்தையுடைய மயிலைப்போலவும், தியாகங் கொடுக்கும் செல்வவந்தர்களை ஆராய்ந்து தேடுங் கவிவாணர்களைப்போலவும், நாயகனைச் சிந்தித்துக் கொண்டிருக்குங் குலமகள்போலவும், சூரியனைக் கண்டு இதழ்கள் விரியாநின்ற சரோருகம்போலவும், சந்திரனைக்கண்டு மடலவிழும் நீலோற்பலம் போலவும், தனது குருமூர்த்தியை இடைவிடாமற் சிந்தித்துத் தரிசித்த மாத்திரத்தில் ஆநந்த பாஷ்பம் சொரிந்து ஆநந்த நிர்த்தனம் செய்பவனே சற்சிடன்.

நான் யார்? எனக்கு ஆசான் யார்? நீங்காத செனனமரணங்கள் எனக்கு வந்தது யாது காரணத்தால்? நான் எப்போது ஆதமலாபம் அடைவேன்? என்று தனக்குள் தானே ஆத்மவிசாரத்தை யடைந்து, தேனைத் தேடித்திரியும் வண்டினங்களைப்

* சரற்காலம்—ஐப்பசியும் கார்த்திகையுமாம்.

போல் தனது சற்குரு மூர்த்தியைப் பலவிடங்களிலும் தேடி யலைபவனே சற்சீடன்.

### சிவஞான வள்ளல்.

மண்ணுக் கிரையாம் இவ்வுடம்பை மாற்றவேண்டி வனமலைகள்
மொண்ணைப் பொதும்பர் நந்தவன மூதூர்தனித்த விடந்தோறும்
உண்ணைக் குருகித் தேசிகனைத் தேடிவாடி யுயிர்ப்பெறிந்து
கண்ணிலருவி யொழியானுய்க் கலங்கி மலங்கிக் கதறினனே.

### பட்டினத்தடிகள்.

சாந்தமும் நோன்பும் தவமும் அடக்கமுந் தண்ணளியும்
வாய்ந்த குருச்சொலும் வாக்கியங் கேட்டு மனமவன்பால்
காந்தமும் ஊசியுங் கண்ணுங் கதிருங் கலப்பதுபோல்
எய்ந்தது வேமுத்தி யென்றான் எழிற்கச்சி யேகம்பனே.

ஒவ்வோர் மனிதரும் அரசன் சமுகத்திலும், இயமன் முன்னிலையிலும் மீறாமல் அடங்கிவிடுவார். அதுபோல், ஞானாசிரியர் திருவாக்குக்கு எதிர்வாக்கின்றிப், பாகன்கீழ் யானை அடங்கி அவனிட்ட வேலையைச் செய்து முடிப்பதுபோல், குருமூர்த்தியின் மனோபீஷ்டத்திற் கிணங்கி அடங்கி நடப்பவனே சற்சீடன்.

இரவெல்லாம் சமீபத்திலிருந்து குருபரனது உபய திருவடித் தாமரைகளை வருடிக்கொண்டிருந்து பகலெல்லாம் குற்றேவல்புரிந்து, மனம், வாக்கு, காயமென்னும் திரிகரண சுத்தியாக அன்புடன் பணிசெய்பவனே நன்மாணவன்.

### திருமந்திரம்.

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவமாகிக் கோனுமாகி நிற்கும்
குருவே யுரையுணர் வந்ததோர் கோவே.

### சிவஞான வள்ளல்.

குருவாக் கமுதமெனக் கொண்டுவந்த சீடன்
குருவாக்கை யன்றிமற்றைக் கொள்ளான்—குருவாக்கால்
உய்ந்தோ மென்றிந்த வுலகறியப் பன்முறையும்
தொந்தோமென் றடித் தொழும்.

ஒற்றுமையில் உடலுக்கு உயிரைப்போலவும், பாதுகாத்த லிற் கண்ணுக்கு இமையைப்போலவும், நடையில் ஊசியும் நூலும் போலவும், சர்ப்பத்தைப் பிடியென்று சொன்ன மாத்திரத்திற் பிடிக்கவும், புலியைக் கட்டித்தழுவு என்றவுடன் அங்ஙனஞ் செய்யவும், நெருப்பை யெடுக்கச்சொன்னால் அவ்வாறு எடுக்க வும், மதகரியின்முன் நில்லென்றால் அஞ்சாமல் நிற்கவும், இவ னது சித்தம்! மகா திடச்சித்தம்! என்று கண்டோர் வியந்து சொல்லும்படியான பரிபக்குவனுக்கு சற்குரு மூர்த்தியானவர் ஆத்மஞான நிட்டையை உபதேசிப்பார்.

துணங்குடி வள்ளல்.

வஞ்ச வேல்கொடு மார்பி லெறியினும்
மிஞ்சவே தழல் மீட்டி யெரிக்கினும்
நஞ்சினு ரழல் நாகம் நலியினும்
அஞ்சி டாதவர் ஆனந்த மாவரே.

ஆசிரியர், மாணவனுடைய பரிபாக பக்குவத்தைப் பரி சோதிக்க எண்ணி, சீடன் பயப்படும்படியாகத் தன்னாலாவது பிறரைக் கொண்டாவது கேவலமான தொழில்களைச் செய்யும் படி உத்தரவுசெய்தும், காருண்ய மில்லாதவர்போன்று கல் முத லியவைகளால் எறிந்தும், இழிவான சொற்களால் வைதும், மானக் குறைவு தோன்றும்படிச் செய்தாலும்; அவ்வமயத்திலும் குருபக்தி வழுவாமற் பணி புரிபவனுக்கே சிற்சுகோதயப் பிரம்ம நிட்டையை உபதேசிப்பார்.

(இன்னும் வரும்)

வேதாந்த பாஸ்கரன்.

---

## மதுபானம்.

சகோதரர்களே! மதுபானம் செய்வதே பஞ்சமா பாதகங் களுக்கும் காரணமாக இருந்து கொடுமையான நரகக்குழியில் தள்ளி வெகுகாலம் வருந்தச்செய்கிறது. அப்படியிருக்க, சிலர் மதுபானத்தால் சரீர புஷ்டி உண்டென்றும் பலவிதமாக பிதற்று கிறார்கள். அப்படியே நன்மையிருந்தாலும் அதனால் விளையும் தீங்குகளுக்கு அந்த நன்மை எம்மாத்திரம்?

ஆதிகாலத்தில் தாழ்வான பஞ்சமர்கள் மாத்திரமே அதிகமாக மதுபானம் செய்துவந்தார்கள். அந்த மதுபானம் ஆகிய கொடிய வழக்கத்தினுலும் ஆடுமாடு நண்டு நத்தைகள் முதலியவற்றை ஜீவகாருண்யமில்லாமல் சாப்பிட்டு வந்ததனுலுமே அவர்கள் நாகரீகமுடைய வகுப்பாரால் கீழ்மையாக நினைக்கப்பட்டும் தீண்டாமையால் ஒதுக்கப்பட்டார்கள். வரவர நாகரீகமும் நற்குலமும் கௌரவமும் உடையவர்களும் மதுபானத்தில் மூழ்கிக் கிடக்கிருர்கள். இவர் போன்றவர்களும் இக்காலத்தில் ஆசாரமற்ற அநாகரீகர் என்று ஒதுக்கப்படவேண்டுவது அவசியமேயன்ருே? கள் குடித்தவர்கள் தம்மைத் தாமே மறந்து, கொலை, களவு, கற்பழித்தல், நல்லோரை நிந்தித்தல், சூது, பொய் முதலிய எவ்வித பாவச்செயல்களையும் செய்யத் தூண்டப்படுகிருர்கள். இந்தப் பாழும் குடியின்பேரிலேயே ஞாபகமாயிருந்து தம்முன்னேர் வெகு கஷ்டப்பட்டுச் சம்பாதித்துவைத்த பொருள்களை எல்லாம் வீணர்களோடு சேர்ந்து கொஞ்சக் காலத்தில் குடித்து அழித்துவிட்டு தரித்திரத்தால் வருந்துகிருர்கள். அவ்வித தரித்திர திசையிலும் குடியை மறக்காமல் எப்படியாவது கஷ்டப்பட்டேனும் எங்கேயாகிலும் திருடியேனும் குடிக்கிருர்கள். தினசரி நாலணு சம்பாதிக்கக் கூடியவர்களும் அந்த சொற்ப சம்பளத்தை கள்ளுக்கடைக்கு கொடுத்துவிடுகிருர்கள். சில குடிசைகள் அடங்கிய ஒரு சிறிய கிராமத்திலும் ஓர் கள்ளுக்கடைதான் இருக்கிறது. வீட்டிலோ பெண்டுபிள்ளைகள் உண்டி உடையில்லாமல் தவிக்கிருர்கள். கள்ளுக்கடையிலோ ரூபாய் ஒன்று இரண்டுக்குக் குடித்துவிட்டு ஆடி விழுந்துகொண்டு திரிகிருர்கள்.

மற்றும் இந்த குடிமயக்கத்தால் தம்மை அரிதில் பெற்று வளர்த்த அருமைத் தாய் தந்தையரான வயோதிகரைத் தடிகொண்டடித்தும் பலவாறு நிந்தித்தும் துரத்தி ஆதரவற்றவராய்த் திரியவிடும் மகாபாவிகள் அநேகர். சன்மார்க்கத்தில் ஒழுகும் புண்ணிய சீலர்களை நிந்தித்தும் நாஸ்திகவாதம் பேசியும் அஞ்சாமல் ஆலயங்களில் பிரவேசித்து அநியாயச் செயல்

புரிந்து கொடிய நரகத்தைக் காணியாகக் கொள்பவர்களும் எண்ணில்லாதவர்கள். தம் பெண்டு பிள்ளைகளை அடித்து சதா சடர் விளைத்தும் கொலைசெய்தும் மரண தண்டனை அடைந்தோர், அடைகின்றவர் அளவில்லாதவர்கள். மெய்மறந்து நல்லொழுக்கங்களை யெல்லாம் விடுத்து கண்டோர் அஞ்சிநடுங்கி ஒடுங்கி ஓடும்படியான கொடூரத் தன்மையோடும் கண்சிவக்கக் குடித்து பைத்தியம் பிடித்தவர்கள்போல ஏதேதோ பிதற்றிக்கொண்டு திரியும் இரண்டுகால் மூர்க்க மிருகங்கள் பல. மகானுபாவர்கள் போலப் பொய்வேடம் புனைந்து கண்டோரிடத்திலும் யாசித்து இஷ்டப்படி கள்ளென்றும், சாராயமென்றும், பிராந்தியென்றும், கஞ்சா என்றும் இவைகளை வாங்கி சாப்பிட்டு சத்திரங்களிலும் ரஸ்தாக்களிலும் கண்டோர் நகைத்து வசைகூற விழுந்து புரளும் பாவிகள் அனேகர். இவ்விதமாக குடித்துக் கோலாகலம் பண்ணுவதற்கா இநத மகாபாவிகள் இவ்வுயர்ந்த மானிடப்பிறவி எடுத்தார்கள்?

எத்துணைப் பெரும் செல்வவான்களாயினும், மற்றெவராயிருப்பினும் மதுபானம் செய்வாராயின் அவர்களை ஒருவரும் மதிக்கமாட்டார்கள். அவர்கள் வார்த்தைகளையும் நம்பார்கள். 'குடிகாரன் பேச்சு பொழுது விடிந்தால் போச்சு' என்ற பழமொழியும் அதனாலேயே வழங்குகிறது. தான் குடிப்பதில்லை என்று போக்கியமாகப் பேசிக்கொண்டாலும் கள்குடித்த காலத்தில் தானாகவே வெளிப்படுத்திக் கொள்கிறான். கள் குடிப்பது அவமானம் என்று கருதி மறைத்துப் பேசுவோர்களும் குடிக்கத் துணிவது எதனாலேயோ?

தற்காலத்தில் பல பிரபல மனுஷ்யர்கள் மதுபானம் ஆகாது என்று பிரசங்க வாயிலாகவும் பற்பல பத்திரிகைகள் மூலமாகவும் தெரிவித்து அதை ஒழிக்க முயல்கின்றனர். தொண்டர் கூட்டங்களும் குடிப்போர்களை சாத்விக மறுப்பால் மறுக்கின்றார்கள். ஆனால் ஒருவரும் நமது நன்மைக்காகத்தானே அவர்கள் மறுக்கின்றார்கள் என்பதை உணரமாட்டேன் என்கிறார்கள். அம்மகானுபாவன்களுடைய பிரசங்கங்களைக் கேட்டபோதே ஏதேது

நமது கொள்கைக்கு முற்றிலும் மாறாயிருக்கிறது' என்று நீங்குவோர் பலர். பிரசங்கம் கேட்டு மாத்திரையில் பிரசங்க வைராக்யம் தோன்ற இனி குடியை ஒழித்துவிடவேண்டும் என்று கருதி விட்டு வீடுசெல்லும் காலையில் வழியில் உள்ள கள்ளுக்கடை புகுவோர் பலர். ஆயினும் அம்மகானுபாவன்கள் பிரசங்கங்களின் பயனென? நமது பாரதபூமியின் நன்மைக்குறியோ? சிலர் இக்கட்குடியின் கேடுகளைப் பிரத்யக்ஷமாகக் கண்டு அறிவு தோன்ற இக்கொடிய மதுபானத்தை விட்டு தாமும் பிரசங்க வாயிலாக தம்போலியர்களை நல்வழி திருப்ப முயல்கிறார்கள். இவர்கள் நல்வழிகாட்டும் வழிகாட்டிகளே யாவர். இன்னும் இவர் போன்றவர்கள் முன்வந்து நம்நாட்டின் மதுபானத்தை அறவே ஒழிக்க முயல்வார்களாயின் நம்நாட்டின் தரித்திர திசையும் நீங்கும். பாரதபூமி புண்யநாடு என்ற பெயரும் விருத்தியாகி நிலைநிற்கும்.

ப. வீரப்பத் தஞ்சவாயன்,
கருவேலி.

---

## சிபிச் சக்ரவர்த்தி.

நமது நாட்டை அரசாண்ட பல மன்னர்களில் சிபிச் சக்ரவர்த்தி யொருவர். இந்த உலகத்திலுள்ள அரசர்களி லவரும் கப்பங்கட்டிவரத் தாம் மன்னர் மன்னனாகி சக்ரவர்த்தியாக விருந்து அரசாண்டு வந்தார். இத்தனை செல்வப் பெருக்கிருந்தாலும் அவையாவும் கடவுளுடைய சொத்து என்று கருதி டம்பம் அகங்காரம் முதலிய கெட்ட குணங்களின்றி நீதி செலுத்தி வந்தார். அப்படியிருந்த நாள்களில் ஒருநாள் சிபிச் சக்ரவர்த்தி தமது பூங்காவனத்தில் உலாவிக்கொண்டிருநதார். அப்போது ஆகாயத்தில் ஒரு பெரிய பருந்தால் துரத்தப்பட்டுக் களைத்துப்போன ஒரு ஏழைப் புறுவானது துடித்துக்கொண்டு அரசனுக்கு முன்னால் வந்து விழுந்தது. அதன் பரிதாபத் தன்மையைக் கண்ட அரசன் இரக்கப்பட்டு அதனைக் கையிலெடுத்துத் தடவிக்கொடுத்து அதன் களைப்பையும் பயத்தையும் மாற்றினார். அப்போது பருந்தானது "ஏ சக்ரவர்த்தி! எனது பசியி

னிமித்தம் இந்தப் புறுவைத் துரத்திக்கொண்டு வந்தேன். அது என்னுடைய உணவாகும். அதனை நீர் எடுத்துக்கொள்வது தருமமல்ல. அதனை என்னிடம் கொடுத்துவிடும். நாங்கள் சாக பக்ஷணம் செய்வதில்லை. எப்போதும் நாங்கள் மாமிச போஜனமே செய்து வருகிறோம். ஆதலால் நான் துரத்திவந்த புறுவை என்னிடம் கொடுத்து விடுவதுதான் தர்மம்'' என்றது.

அரசன் இதைக்கேட்டு, ''உண்மைதான்; ஆனால் அந்தப் புறுவானது பயந்து கண்ணீர்விட்டு அலறிக்கொண்டு என்னிடத்திற்கு வந்தபடியால் அதனைக் கொல்ல நான் சம்மதியேன். அதற்குப் பதிலாக நீ எதைக்கேட்டாலும் தருகிறேன் என்று கூறினர். இதைக்கேட்ட பருந்து, ''எனக்கு உம்முடைய எந்த செல்வமும் தேவையில்லை; பசிக்கிறது அதனைத் தீர்க்க ஏதாவது மாமிச உணவு வேண்டும். அதுவும் அந்தப் புறுவின் அளவு தந்தாற் போதும்'' என்றுரைத்தது. அரசன் சந்தோஷப்பட்டு ஒரு தராசு கொண்டுவரச்செய்து ஒரு தட்டில் அந்தப் புறுவை வைத்துவிட்டுத் தன் உடைவாளை யுருவித் தன் தொடையை அறுத்து சதையைக் களைந்தெடுத்து மற்றொரு தட்டில் வைத்தார். ஒரு துண்டு. இரண்டு துண்டாகப் பலமுறை அறுத்தறுத்து வைத்தார். என்றாலும் புறுவின் தட்டு கீழேயிருந்தது. தன் சரீரத்திலிருந்த சதை முழுமையும் கத்தியால் அரிந்து முடியவே கடவுளுக்கு அருள் சுரக்க சிபிச்சக்ரவர்த்திக்கு அழிவற்ற மோக்ஷவின்பம் நல்கினர். வேறொரு அறிவற்ற பக்ஷியால் கொல்லப்படவிருந்த ஒரு புறுவை ரக்ஷிப்பதற்காக ஒரு பெரிய சக்ரவர்த்தி தமது சதையை நறுக்கி யீடாக்கி அவ்வுயிரைக் காப்பாற்றினர். இப்போது ஆறறிவுள்ள மனிதர்களாகிய நாம் நமது சதை வளருவதற்கென்று கருதிப் பலவுயிரைக் கொல்லலாமா? நமக்கு சிபிச்சக்ரவர்த்தி யவ்வளவு இரக்கமில்லாவிட்டாலும் கொஞ்சமாவது வேண்டாமா? நாம் மற்ற ஜீவனிடத்தில் இரக்கங் காட்டாவிட்டால் கடவுள் நம்மிடத்தில் எதற்காக இரக்கங் காட்டவேண்டும்? நமக்குப் பிள்ளை பிறக்கவேண்டுமென்று ஆடு கோழிகளின் பிள்ளைகளைக் கொல்லலாமா? எல்லாவுயிர்களையும் தமது பிள்ளைகளைக் கருணைகாட்டி ரக்ஷிக்கும் கடவுள்

நமக்குக் கிருபை புரிவாரா? கடவுளருள் வேண்டுமானால் ஒரு உயிரையும் கொல்ல எண்ணாதீர்கள்!

காரைச் சிவனடியார்.

## ஆணிமாண்டவியர்.

முன்னொரு காலத்தில் பல குழந்தைகள் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களுள் ஒரு துடுக்கான பையன் அங்கு பறந்து திரிந்த ஒரு தட்டானைப் பிடித்து அதன் வாலைக் கொஞ்சமாகக் கிள்ளிவிட்டு அதிலே ஒருமுள்ளைக் குத்தி ஒரு நூல் கயிற்றைக் கட்டிப் பறக்கவிட்டு விளையாடினான். பின்னர் பல வருஷங்கள் சென்றன. அந்தப் பையன் நாலு வேதம் ஆறுசாஸ்திரம் பதினெண் புராணங்களைக் கற்றுப் பெரிய மேதாவியானான். பிறகு இந்த உலக போகங்களையும் வெறுத்து நிஷ்டைகூடித் தவம்புரிந்து பெரிய ரிஷியாகவும் ஆனார். ஒரு நாள் ஒரு பெரிய காட்டினிடத்தில் தமது ஆசிரமத்தில் யோக நிஷ்டையில் அந்த ரிஷியானவர் அமர்ந்திருந்தார். நிற்க,

அந்த நாட்டையாண்ட அரசன் வீட்டில் திருடர்கள் புகுந்து பல உயர்ந்த சாமான்களைத் திருடிக்கொண்டு ஓடினார்கள். ஓடும்போது அரசனது சேவகர்கள் தங்களைத் தேடிவந்தால் கஷ்டப்படவேண்டுமென்று கருதினார்கள். அந்த விடத்தில் இந்த ரிஷியானவர் கண்மூடி மௌனியாக வீற்றிருக்கக் கண்டு, இவரைப் பார்த்தவுடன் திருடர்களாகிய நம்மைத் தேடாதிருக்கவேண்டுமென்று யோஜித்து, அவர் கழுத்தில் ஒரு வைரப் பதக்கத்தை மாட்டிவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். பிறகு சொற்ப நேரத்தில் அரசனது சேவகர்கள் அங்கு வந்து பார்த்து, "இவன் தான் அரண்மனையில் திருடினவன்; நம்மைக் கண்டவுடன் ஓட வழியின்றிக் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறான்" என்று கருதி அந்த ரிஷியினது கால் கைகளைச் சேர்த்துக் கட்டித் தூக்கிக் கொண்டுபோய் அரசனிடம் நிறுத்தினார்கள். அரசன் பார்த்து "கையும் களவுமாயிருப்பதால் இவனைக் கழுவில் போடுங்கள்" என்று உத்தரவிட்டான். அப்படியே அந்த ரிஷியைக் கழுவிலே கோத்துவிட்டார்கள். அதன்பின்னர் தான் அவருடைய

யோகம் கலந்தது. ஆணிமாண்டவியர் விஷயத்தைச் சொல்லவே அரசன் விடுதலை செய்துவிட்டான். அன்றுமுதல் அவருக்கு "ஆணிமாண்டவியர்" என்று பெயர் வழங்கியது. உடனே அவர் மிக்க கோபத்தோடு யமதருமராஜனிடஞ் சென்று நான் சிறு பிள்ளையில் தெரியாமல் செய்த பாவத்திற்குத் தண்டிப்பது ஞாயமா? என்று கேட்டனர். அதற்கு யமதர்மராஜன், "தெரிந்து செய்தாலும் தெரியாமற் செய்தாலும் ஒரு ஜீவனுக்குத் துன்பஞ் செய்தால் அநுபவியாமல் தீராது! எவ்வளவு பெரிய ரிஷியானு லும் எத்தனை தலைமுறை தவம் செய்தாலும் தருமம் பண்ணினு லும் தீர்த்தமாடினுலும் உயிர்வதை விடாது" என்று பதில் சொல்லிவிட்டான்.

சகோதரர்களே! அறியாத சிறுபிள்ளையாக விருந்தபோது விளையாட்டாக கேவலம் ஒரு தட்டானைப் பிடித்து விளையாடிய தற்காக, பல வருஷங்கள் சென்றபிறகு ஒரு பெரிய ரிஷீஸ்வர ருக்கு, அந்தத் தட்டானை யெப்படித் துன்பப்படுத்தினரோ அப்படியே தண்டனை கிடைத்துவிட்டது. இப்போது பாவ மென்று தெரிந்து நாம் நல்லாயிருக்க வேண்டுமென்று கருதி ரத்தம் ஆருகப் பெருகியோடக் கழுத்திலே காலை வைத்து மிதித் துக்கொண்டு ஆடு கோழிகளைக் கழுத்தறுத்தால் அந்தப் பாவம் விடுமா? ஆட்டையும் அதன் பிள்ளைகளையும் கதறக் கதறக் கொன்ருல் நாமும் நமது பிள்ளைகளும் வாழுமா?

காரைச் சிவனடியார்.

---

## செத்தவள் பிழைத்தது.

பாரிஸ் நகரில் ஓர்மாது இறந்துவிட்டாள். அவளைச் சவப் பெட்டியில் அடக்கஞ்செய்து பெட்டியைச் சமாதியில் வைத்து மண்ணைத் தள்ளி மூடும்போது, சவப்பெட்டிக்குள்ளிருந்து ஓர் சத்தம் கேட்டதாம் அதன்பேரில் சவப்பெட்டியை மேலே தூக் கித் திறந்து பார்க்கையில் இறந்தவள் பிழைத்துக்கொண்டு உயி ருடன் இருந்தாளாம். நமது நாட்டு இந்தியர்களாயிருந்தால் அவளை அப்போதே அடித்துச் சுட்டுச் சாம்பலாக்கிவிடுவார்கள்.

(விரிவாக.)

## ஸ்வராவளி

மாயாமாளவ கௌள ராகம் — ஆதிதாளம்

### மத்தியகாலம்.

| | I | | | | O | | O | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஸரி | கம | பத | நிஸ் | ஸ்நி | தப | மக | ரிஸ |
| 2. | ஸரி | கம | ஸரி | கம | ஸரி | கம | பத | நிஸ் |
| | ஸ்நி | தப | ஸ்நி | தப | ஸ்நி | தப | மக | ரிஸ |
| 3. | ஸரி | கம | ஸரி | ஸரி | ஸ்ரி | கம | பத | நிஸ் |
| | ஸ்நி | தப | ஸ்நி | ஸ்நி | ஸ்நி | தப | மக | ரிஸ |
| 4. | ஸரி | கம | பா | பா | ஸரி | கம | பத | நிஸ் |
| | ஸ்நி | தப | மா | பா | ஸ்நி | தப | மக | ரிஸ |
| 5. | ஸரி | கம | பா | ஸரி | ஸரி | கம | பத | நிஸ் |
| | ஸ்நி | தப | மா | ஸ்நி | ஸ்நி | தப | மக | ரிஸ |
| 6. | ஸரி | கம | பம | கரி | ஸரி | கம | பத | நிஸ் |
| | ஸ்நி | தப | மப | தநி | ஸ்நி | தப | மக | ரிஸ |
| 7. | ஸரி | கம | பம | தப | ஸரி | கம | பத | நிஸ் |
| | ஸ்நி | தப | மப | கம | ஸ்நி | தப | மக | ரிஸ |
| 8. | ஸரி | கம | ரிக | மப | ஸரி | கம | பத | நிஸ் |
| | ஸ்நி | தப | நித | பம | ஸ்நி | தப | மக | ரிஸ |
| 9. | ஸரி | கம | பா | கம | பா | ஆ | பா | ஆ |
| | கம | பத | நித | பம | கம | பக | மக | ரிஸ |
| 10. | ஸ்ா | நித | நீ | தப | தா | பம | பா | பா |
| | கம | பத | நித | பம | கம | பக | மக | ரிஸ |
| 11. | ஸரி | கரி | கா | கம | பம | பா | தப | தா |
| | மப | தப | தநி | தப | மப | தப | மக | ரிஸ |
| 12. | ஸரி | கம | பா | பா | தத | பா | மம | பா |
| | தநி | ஸ்ா | ஸ்நி | தப | ஸ்நி | தப | மக | ரிஸ |
| 13. | ஸரி | கம | பத | நிஸ் | ஸ்ா | ஆ | பா | ஆ |
| | ஸ்நி | தப | மக | ரிஸ | ஸா | ஆ | பா | ஆ |
| 14. | ஸரி | கம | பத | நிஸ் | ஸ்ா | பா | ஸ்ா | பா |
| | ஸ்நி | தப | மக | ரிஸ | ஸா | பா | ஸா | பா |
| 15. | ஸரி | கம | பத | நிஸ் | ரீ | ஸ்ா | நித | நிஸ் |
| | நீ | நீ | தப | தநி | தா | தா | பம | பக |
| | பா | பா | மக | மப | மா | மா | கரி | கம |
| | ஸ்நி | தப | மக | ரிஸ | ஸ்நி | தப | மக | ரிஸ |

அன்பன்.

## வைத்தியம்.

(ஆபத்சகாயம்)

(20-ம் பக்கத் தொடர்ச்சி.)

பூவரசுமூலத்தைப் பாலிற்கொள்ள, சொறிசிரங்கு, கரப்பன், விஷகரப்பன், வீக்கம், சில்விஷம் தீரும்.

சரக்கொன்னை மூலத்தைப் பாலிற்கொள்ள, வண்டுகடி, குஷ்டம், சொறி, தேமல், விஷநீர், வாதசூலை, வாதகரப்பன் தீரும். இதன் பூவையும் கொழுந்தையும் அரைத்துப் பாலிற்கொள்ள பிரமியம், வெட்டை, காமாலை, பாண்டு, பித்தம் விஷபாக வீக்கம் தீரும். இந்தப் பூவை எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்து உடம்பில் தேய்த்துக் குளித்துவர, சொறி, கரப்பன், தேமல் பற்றுத் தீரும்.

ஆவரைப் பஞ்சாங்கத்தைப் பாலில் ஒரு மண்டலங்கொள்ள, நீரழிவு, பிரமேகம், ஆண்குறி யெரிவுநீங்கும். இப்பஞ்சாங்கத்தையும் வெந்தயத்தையும் சிவக்க வதக்கிக் கியாழம் செய்து, அதிற் கோரோசனையை உரைத்துக்கொடுக்க இரத்தக் கடுப்புத் தீரும்.

புரசுமூலத்தைப் பாலிற் கொள்ள, எலிவிஷம், குன்மம், வாயு, வாதம் நீங்கும். இதன் விதையை எருமைச்சாணிக்குள் புதைத்துக் காலையில் இரண்டு விதையைத் தோல்நீக்கி அரைத்து ஆவின்பாலிற் கொடுக்க, வயிற்றிலுள்ள பெருங்கிருமிகள் விழும். அவைகளினாலுண்டாகும் வயிற்றுவலி தீரும்.

நாவல் மூலத்தைப் பாலிற்கொள்ள, பெரும்பாடு, வெட்டை, மேகம், கழிச்சல், கிராணி தீரும். இதன் பழரசம் மேகநீரழிவைக் கெடுக்கும்.

ஆலவிதையையும் அரச விதையையும் பாலிற் கொள்ள, இரத்தம் கக்கல் நீங்கும்.

தூதுவேளையை ஆதிவாரத்தில் சமூலம் பிடுங்கி வந்து நிழலில் உலர்த்தித் தூளாக்கி, திரிகடிப்பிரமாணம் ஆவின்பாலிற்

கொள்ள, பித்தம் காற்பதும் தீரும். வெள்ளாட்டு நெய்யிற் கொள்ள கபம் தீரும். சிற்றாமணக் கெண்ணெயில் கொள்ள சரீர வறட்சி தீரும். இதன் இலையைச் சமைத்துத் தின்னப் பசியுண்டாம். பூவை நெய்யில் வதக்கியுண்ணத் தாதுபுஷ்டி யுண்டாம். காயை அந்தப்படி சாப்பிட வாதபித்த சிலேத்துமம் நீங்கும். வேரை வெற்றிலை பாக்குடன் தின்றுவர திரிதோஷம் நீங்கும். தூதுளை சமூலம், பேய்ப்புடல், கரிப்பான், மிளகு, சீரகம், சாதிக்காய், கிராம்பு, வால்மிளகு இவைகளைச் சூரணித் துப் பிட்டவித்து, நெல்லிக் குச்சியாற் கிண்டி ஆற்றி, சர்க்கரை யிற்கொள்ள, காந்தல் வீக்கம் சோகை தீரும்.

வல்லாரை சமூலம் பாலிற்கொள்ள, மருந்தீடு, க்ஷயம், காசம், இருமல், ஈளை, கைகாலில் உண்டாகும் ஊறல் நீங்கும். நெடுநாட்கொள்ள நரை திரை மாறும்.

கீழ்காய் நெல்லி சமூலத்தைப் பாலிற்கொள்ள, சோகை, காமாலை, பாண்டு, உடல் வெளுப்பு, வாதபித்த ரோகம் நீங்கும். இரத்தம் மிகும்; கண் குளிரும்; காயசித்தியாம்.

பற்படாகம் சமூலத்தைப் பாலிற்கொள்ள, வெட்டைமேகம், எரிவு, காந்தல், அஸ்திகாங்கை, வாயு, பித்தம் தீரும்.

விஷ்ணுகரந்தை சமூலம் பாலிற்கொள்ள, சுரம், மேகம், க்ஷயம், காசம், இருமல், ஈளை, விஷங்கள், வாதம், பித்தம் தீரும். கண்ணுக்கு ஒளியுண்டாம் இந்த சமூலச்சாற்றில் சிற்றரத்தையை அரைத்துக் கலக்கிச் சுடவைத்துச் சாப்பிட்டாலும் மேற்படி வியாதிகள் தீரும்.

ஊமத்தின் வேரும் அதின் வித்தும் வகைக்கு ஒருவராக னெடை எடுத்து அரைத்து ஆவின்பாலிற் கலக்கி, காலையில் (3) நாள் கொடுக்க எலிகடி விஷமும், பேய்நாய், பேய்நரி கடி விஷமும் குளிர்சுரமும் தீரும்.

விளாமூலத்தைப் பாலிற்கொள்ள, காசசுவாசம், அரோசி யம், தாகம், பித்தம் நீங்கும்.

தேற்றும் வித்தைப் பாலிற்கொள்ள, பித்த காசம், க்ஷயம்,

சுஃோ, இருமல், மேகம், பிரமியம், உந்திப்புண், கிருச்சரம, கண்ணெரிவு, தேகக்கடுப்பு நீங்கும். தீபனமுண்டாம்.

எட்டிவித்தைப் பாலிற்கொள்ள, தேள், நட்டுவக்காலி விஷமும், மற்ற விஷங்களும் தீரும். குஷ்டம், கைக்கருப்பு, வாதம், தாதுநஷ்டம் நீங்கும். பித்தம் அதிகரிக்கும். சிலந்தி, இரத்தக்கட்டி, நீர்க்கட்டி, புண்புடைகளில் மேற்படி வித்தை அரைத்துப் பூசத் தீரும்.

(இன்னும் வரும்)

க. ஞானபூபதி.

---

## தாம்பூலத்தின் குணம்.

(95-ம் பக்கத் தொடர்ச்சி.)

அந்த சாற்றை விழுங்கில் நெஞ்சு உலரலும் கபக்கட்டும் மேற்கூறிய பாக்கின் தோஷங்களும் விலகுவதால் லெட்சுமி வாசஞ்செய்வாள் என்றும் ஆன்றோர் கூறுகின்றனர்.

தாம்பூலம் தின்னும்போது சுண்ணம் வைத்திருந்த வெற்றிலை காம்பு நுனி நீண்ட நடுநரம்பு பின்புறம் தோல் இவைகளை நீக்காத வெற்றிலையை தின்னலாகாது. பாக்கு வெற்றிலை சுண்ணம் இவைகளை ஒன்றுசேர்த்து மெல்லும்பொழுது அதில் ஊறிய முதல்நீர் நஞ்சு, 2-வது நீர் பைத்தியத்தை உண்டாக்கும், 3-வது நீர் அமிர்தம், 4-வது நீர் தித்திப்பு, 5-வது 6-வது நீர் பித்ததோஷம் அக்னிமந்தம் பாண்டுரோகம் இவைகளை உண்டாக்குமாதலால் அதிகநேரம் வைத்திருக்காமல் உமிழ்ந்துவிடவேண்டும். முன் கூறிவந்த வாசனைவர்க்கஞ் சேர்ந்த தாம்பூலசாரானது வாதம் அக்கினிமந்தம் நாசிகாரோகம் சுவாசகாசம் அரோசகம் வயிற்றைப் பற்றிய துர்க்குணம் இவைகளை நீக்கும். சரீரத்தில் தேஜசும் அறிவு விருத்தியும் கண் பிரகாசத்தையும் உண்டாக்கும். தாம்பூல ரசத்தினால் கிருமி, கபம், தாகம், பல்நோய் இவை நீங்கும். பசி ஸ்திரீகளின் உரவு நாவுருசை மலசுத்தி முன் அறிவு சுக்கில விருத்தி தர்மகுணம் அழகு இவைகளும் உண்டாகும்.

க. ஞானபூபதி.

## ஓர் அபூர்வமான விவாகம்.

(பிரபல ஹிந்து ஒரு முஸ்லீம் பெண்ணை மணக்கிறார்.)

மந்திரி ஹரி கிருஷ்ணலாவின் மூத்த குமாரன் கார்லால் கௌபா இவ்வூர் பாரிஷ்டரான ஜனப் அலில் அஹமதின் புத்திரியான மிஸ் ஹஸ்ராவை இன்றையதினம் மணந்தார். விவாகத்தின்போது மணமகளின் பெற்றோர்கள் மாத்திரம் ஆஜராயிருந்தனர்.

பஞ்சாப்பில் இப்படிப்பட்ட விவாகம் இதுவரை நடந்ததில்லை. வைதீக ஹிந்துக்கள் மத்தியில் இது பெருங் கிளர்ச்சியுண்டுபண்ணி யிருக்கிறது. விவாகம் நடந்தபிறகு தான் லாலா ஹரி கிருஷ்ணலாலுக்கு அதுவிஷயம் தெரியுமாம். தம்பதிகள் உற்சாகமாய் காலம் கழிக்க மர்ரீ என்ற பட்டணத்திற்குச் சென்றிருக்கின்றனராம்.

* * * * *

(நா. மித்திரன்.)

---

## IDEAL TEACHER.—பேராசிரியன்.

உபாத்தியாயர்களுக்கும், மாணவர்களுக்கும், உபயோகமான மாதாந்தர செந்தமிழ் பத்திரிகை. மாதிரிக் காப்பி அணா 3. வருடச் சந்தா ரூ. 1-8-0.

பாலர் கதாமஞ்சரி:—ஸரஸ்வதி, ஸுலோசனை, கௌஸல்யா, கனகாங்கி, பீஷ்மன், பரதன், நக்கீரன் முதலிய 22 கதைகள் அடங்கியது. 300 பக்கங்கள் ரூ. 2.

குஸுமா:—ஜயபாலர் ஓர் ராஜபுத்திரியின் சாஹசகுணங்களை விளக்கும் நாடகம் அணா 8.

அபிநய கீதங்கள்:—(Moral Stories in Action Songs) As. 5.

பகவத்கீதை வசன சுருக்கம். As. 2.

N. VENKATARAYALU & SON,
96, Thumbu Chetty Street, Madras.

# தாருல் இஸ்லாம்.

இஃதோர் உயர்தர நூதன இஸ்லாமிய
மூதற்றர மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

தமிழ்நாட்டுச் சகோதர சகோதரிகாள்! "தாருல் இஸ்லாம்" இன்னதென்பதை இதுவரையில் நீங்கள் தெரிந்து கொண்டிருக்கிறீர்களா?

இஸ்லாத்தின் உண்மைக்கொள்கைகளை யெல்லாம் உள்ளபடியே நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டாமா? குர்ஆன் ஷரீபும் ஹதீதுஷரீபும் கூறப்பட்டிருப்பது இன்னதெனத்தெரிந்துகொள்ளவேண்டாமா? இஸ்லாத்திலுள்ள ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை இன்னதென அறிந்துகொள்ள வேண்டாமா? இஸ்லாத்தின் சமரசக்கொள்கை இன்னதென்பது உங்களுக்குத் தெரியுமா? இஸ்லாத்தின் தேசிய ராஜீய ஞானமும் இன்னதெனத் தெரிந்துகொள்ளவேண்டாமா? முஸ்லிம் உலகமுழுதும் நடைபெறும் முக்கியமான விஷயங்கள் இன்னவையென அறிந்துகொள்ள வேண்டாமா? இஸ்லாத்தில் இதுவரையில் தோன்றியுள்ள பெரியோர்களின் சரித்திரத்தையும் நீங்கள் படித்தறிய வேண்டாமா?

இவைகளெல்லாம் வேண்டுமாயின் எமது "தாருல்இஸ்லா"த்தைப் படியுங்கள். இதன் முதற்பக்கமுதல் இறுதிப்பக்கம் வரையில் அதிரஸமான அபூர்வவிஷயங்களே முழுதும் ததும்பிக் கிடக்கும். இஸ்லாத்தின் பக்தி மார்க்கமும், ஞான மார்க்கமும் இன்ன இன்னவை யென்பதையும் இதன் மூலம் செவ்வனே தெரிந்துகொள்வீர்கள்.

இதில் குர்ஆன்ஷரீபின் மொழிபெயர்ப்பும் இப்பொழுது தொடர்ச்சியாக வெளிவந்துகொண்டிருக்கிறது.

இதன் வருஷசந்தா ரூ. 3. வெளிநாட்டுக்கு ரூ. 4.

தனிப்பிரதி விலை அணா 5.

மாதிரி சஞ்சிகை வேண்டுவோர் 5 அணா ஸ்டாம்பு
அனுப்பவேண்டும்.

விலாசம்:—

மானேஜர், "தாருல் இஸ்லாம்" ஆபீஸ்,
16–17, ஸகின்டு லேன் பீச், மதராஸ்.

# பைந்தமிழ்.

சித்திர விளக்கத்துடன் வெளிவரும் உயர்ந்த மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை. இந்திய ஆண் பெண்களுக்கு அறிவையூட்டுவது பல பிரபல பண்டிதர்கள் வித்வச்சிரோமணிகளின் வியாசங்கள் உள்ளன. வருட சந்தா இந்தியாவுக்கு ரூ. 2—8—0; வெளிநாட்டுக்கு ரூ. 3—12—0; தனிச்சஞ்சிகை 0—4—0; சந்தாதாரராகச் சேர்ந்தால் பரிசுகள் கிடைக்கும்.

K. ஜகதீசன் பீ. ஏ.,
பைந்தமிழ் ஆபீசு,
திருவல்லிக்கேணி, சென்னை.

# தேசசேவகன்.

தேசீய வாராந்தப் பத்திரிகை
பிராஞ்சிந்தியா புதுச்சேரி.

தலைவர்கள் விஷயத்தில் தாக்ஷண்யம், சர்க்கார் விஷயத்தில் அச்சம், இவ்விரண்டுமில்லாமல் சுயேச்சையுடன் தாராளஸேவை செய்வது எது ? "தேச சேவகன்"

பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் வெளிவரும் ஒத்துழையாமை என்னும் மகாத்மாகாந்தியடிகளின் தர்மத்தை ஆதரிப்பது தேசீய இராஜிய விஷயங்களில் அநுபவமுள்ள பெரியோரால் விஷயதானம் செய்யப்படுவது. நாற்றிசை நடப்பும், பாரத ஒளியும் விடாது தெளிவுபடுத்துவது. மற்ற பத்திரிகையை விட இதற்கு பிரான்ஸ்தேச விஷயங்களும் தந்திபோக்குவரத்துகளுமுண்டு.

ஆசிரியர் பழநி சின்னையரத்தினசாமி நாயுடுகார்.
விலாசம் :—தேச சேவகன், புதுச்சேரி.

# இந்துநேசன்.

சனிக்கிழமை தோறும் பிரசுரமாகும் வாராந்தத் தமிழ்ப் பத்திரிகை. இனிய வியாசங்களும் அரிய விஷயங்களும் அடங்கியிருக்கும்.

வருஷ சந்தா ரூ. 6—0—0 தனிப்பிரதி 0—2—0

வேண்டுவோர் இவ்விலாசத்திற்கு எழுதிக்கொள்ளலாம்.

மானேஜர், இந்துநேசன் ஆபீஸ்,

65, அரமனைக்காரத்தெரு மதராஸ்.

# “கதாரஞ்சனி”

## நாவல் நிறைந்த மாத சஞ்சிகை.

1922வரு ஜனவரிமாதம் முதல் நடைபெருகிறது. இதில் இனிய தமிழ் நாவல்களே வெளிவரும். இப்போது மிக அற்புதமாயுள்ள நாவல் எழுதப்பட்டு வருகிறது. வருஷ சந்தா 1–4–0 வெளிநாட்டிற்கு 2—0—0 தனிகாப்பி 0—2—6.

இனம்! இனம்!!

வெளியாய் விட்டது! புதிய நாவல்கள்!!

## புஸ்தக ஆர்டர்களுக்கு மோகனமணி நாவல் இனம்.

| | | | |
|---|---|---|---|
| ராஜலக்ஷிமி | 0–10—0 | மதன சிங்கர் | 0—8—0 |
| கனகாங்கி | 2—0—0 | பூபாலன் | 1–12—0 |
| சரித்திர சந்திரிகை | 0–12—0 | பத்மநாபன் | 0–14—0 |
| விஷ்ணு புராணம் | 3—0—0 | திலோத்தமை | 0—8—0 |
| இராஜாம்பாள் | 0–12—0 | நீலமேகை | 1—0—0 |
| தசகுமாரன் | 0—6—0 | அதி பிரியை | 1—2—0 |
| திலோத்தமா | 0–12—0 | மதன கல்யாணி | 4—8—0 |

இதர நாவல்களும் கிடைக்கும்.

ஸ்ரீ வாணிவிலாச லைபெரரி,

79, சுப்பையா செட்டி வீதி,

திருப்பாதிரிப்புலியூர்.

# கற்பகம்.

ஓர் செந்தமிழ் மாத சஞ்சிகை.

வருஷ சந்தா ரூ 1—0—0 வெளிநாட்டிற்குசந்தா ரூ. 1—8—0

இதில் கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், கைத்தொழில், வேதாந்தம், இராஜாங்க ஜனங்க சீர்திருத்தங்கள், நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலகஅற்புதம், வர்த்தமானம் விநோதக்கூற்று முதலான அரும் விஷயங்களுடன் வெளிவருகிறது.

மானேஜர், கற்பகம் ஆபீஸ், புதுவை.

# தமிழகம்.

மலாய் நாட்டிற்கு ஒரே தமிழ்ப் பத்திரிகையாகிய, "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய் பிரதிதிங்கள், வியாழக்கிழமைகள்தோறும் வெளிவருகிறது. நம்தமிழ் நாட்டிலிருந்து பினங்கு, சிங்கப்பூர், மலாக்கா முதலிய பிரதேசங்களை உள்படுத்திய மலாய் நாட்டில் குடியேறவும் பிழைப்புக்காகவும் வந்திருக்கும் தமிழ்ஜனங்களின் நன்மைகளைக் கருதியும் உரிமைகளைக்காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இது ஐக்கியமலாய் நாட்டிலுள்ள கோலாலம்பூர் பத்துரோட்டில் 186, 188, 190-ம் நெம்பர் கட்டிடங்களில் அமைக்கப்பெற்றிருக்கும் இண்டஸ்திரியல் அச்சுக்கூடத்தில் தமிழறிவாளிகளைக் கொண்டு நடத்தப்படுவது. இது மலாய்நாடு, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுகின்றது, இதன் வருடசந்தா ரிங்கி 10.00 ஆறுமாதத்திற்கு ரிங்கி 5-50 மூன்று மாதத்திற்கு ரிங்கி 3. 00, இந்தியா, பர்மா, இலங்கை, நாடுகளுக்கு வருடசந்தா ரூபாய் 15. ஆறுமாதங்களுக்குரூபாய்8: நீடித்து விளம்பரங்கள் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர் :—

"தமிழகம்" ஆபீஸ்,

நெம்பர் 190 பத்துரோட் கோலாலம்பூர்.

# மதிப்புரை.

விஷயரசமஞ்சரி:—இப்பெயர் புனைந்த ஓர் புஸ்தகமானது இரங்கோன் நவீன கதா புஸ்தகசாலை மானேஜர் அவர்களால் நமது பார்வைக்கு அனுப்பப்பெற்றுள்ளது. ஸ்ரீமான். ச. தா. மூர்த்தி முதலியார் அவர்கள் பல பத்திரிகைகள் வாயிலாக வெகுகாலமாக வெளியிடப்பெற்று வந்ததை தற்காலம் ஒருங்கு திரட்டி புஸ்தக ரூபமாக்கி விஷயரசமஞ்சரி என்னும் நாமகரணம் சூட்டி பல ஜனங்களுக்கும் பேருபகாரமாக வெளியிட்டிருப்பதானது நமது தமிழ்நாடு செய்த ஓர் பெரும் பாக்கியம் என்றே சொல்லவேண்டும். இவர் ஒவ்வொருநாளும் தம் அனுபவத்தின் நுட்பமான அரிய ஞான விஷயங்களைத்திரட்டி ஆழ்ந்த கருத்துக்களுடன் இனிய தமிழ் நடையில் எழுதி வெளியிட்டிருப்பதால் யாவரும் வாங்கிவாசித்து பொன்னேபோல் போற்றவேண்டிய தத்தியாவசியம். இந்நூலாசிரியர் இன்னும் பல நூற்கள் இயற்றிருப்பதாகப் புலப்படுகிறது. அவைகளை அடியிற் குறிப்பிட்ட விலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

நவீன கதா புக்டிப்போ,
மங்கமாரிவீதி, இரங்கூன்.

பத்திராதிபர்களுக்கு ஓர் குறிப்பு:—

அடியிற் கண்ட எங்கள் ஞானசூரியன் விளம்பரத்தை தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அப்படி பிரசுரித்த பத்திரிகையையும் தங்கள் மாற்று விளம்பரத்தையும் எங்களுக்கு அனுப்பிவைத்தால் நாங்களும் எங்கள் ஞானசூரியன் பத்திரிகையில் பிரசுரித்து தங்களுக்கு பத்திரிகை அனுப்பிவைக்கிறோம்.


## "ஞான சூரியன்"

இது ஒரு நிகரில்லாத மாத சஞ்சிகை.

இது இனிய செந்தமிழ் நடையில் அழகாக எழுதப்பெற்ற வியாசங்களைத் தாங்கி, ஆண் பெண் இருபாலருக்கும் படிக்கப் படிக்க நல்லறிவைக் கொடுத்து பரமானந்த மயமாய் ருசிக்கக்கூடியது. ஹிந்து முஸ்லீம்கள் முன்னேற்றம் அடையும் பொது நலத்திற்காகவே கங்கணம் கட்டி உழைப்பது. நமது சந்ததியார்கள் எதற்காகப் பிறந்தோம் என்பதையுணர்ந்து ஆத்மலாப சுயராஜ்சியம் அடைவதற்கு வேண்டிய வழிகளை அநுமையாகப் போதித்துவருவது.

அநேக வேதாந்த நூற்களின் ஆசிரியர் ஸ்ரீ கருணையானந்த ஞான பூபதி அவர்களால் பிரசுரிக்கப்பெற்றுலாவுகின்றது.

ஒருவருட சந்தா ரூ. 1—8—0 வெளிதேசங்களுக்கு ரூ. 2—0-

ஞான சூரியன் ஆபீஸ், விஜயபுரம், திருவாரூர், S. I.

# ஜனங்களே! இன்னுமா தூங்குகிறீர்கள்?

## வேதாந்த பாஸ்கரன்

### என்னும் நமது மெய்ஞ்ஞான சூரியன் உதயமான பின்னரும் தூங்குவது

ஞாயமா! ஞாயமா!!

அஞ்ஞான நித்திரை நீங்கி! மெய்ஞ்ஞான விழிப்படையுங்கள்!!

இவ்வுலகின்கண் ஆத்மலாபம் அடைய அனேக பக்குவிகள் எண்ணியும் (தூணைக் கட்டிப்பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்குதே! விடமாட்டேனென்குதே!! என ஓலமிடுபவரைப்போல்) பிரபஞ்சவாழ்க்கையில் அதிகமாக மனதை நுழைத்துக்கொண்டு ஐயோ! பிரபஞ்சம் விடமாட்டேனென்குதே? என்று வருந்துகின்றனர். தூணை நாம் பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்கிறோமா? தூண் நம்மைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்கிறதா? என்றறிந்தவர் சிலரே. ஆதலின் காட்டிலிருப்பினும் நாட்டிலிருப்பினும் கமல நீர்போல் பற்றற்றிருக்க வேண்டுமேயன்றி, மலை, குகை, முதலானவைகளில் வசிக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை

மரணமாவதோ இன்ன நேரமென்று காணுவது அசாத்தியமாயிருக்கிறது அறுப்பதற்கு கத்தி தீட்டுகிறபோதும் ஆடு அசைபோடுவதுபோல் காலமெல்லாம் கதை, காவியம், பகடி, பரிகாசவேடிக்கை விளையாட்டுகளில் பொழுதைப் போக்கிவிட்டு சாகப்போகிறகாலத்தில் சங்கரா! சங்கரா!! என்று பிதற்றுவதிற் பயனில்லை என்பதை ஆலோசித்து ஆத்மலாபம் பெற முயலுங்கள்.

தேன்வண்டானது தானும் தேனையுண்ணாமல் தேனை எடுக்க வருபவரையுங் கொட்டுகிற தன்மைபோல் இவ்வுலக வாழ்வையே சதமென நினைந்து, நீங்கள் ஆத்மலாபம்பெற முயலாவிடினும் முயற்சிப்பவர்களை தடுக்காதிருங்கள். ஆத்மானுசந்தானம் பெறுவதற்கு அருமை பெருமைவாய்ந்த நமது வேதாந்த பாஸ்கரன் ஓர் சிறந்த வழிகாட்டியாகும், எனெனில் சிலர் எழுதிய சாடு முரடான வசன நடைகளைப்போலின்றி நளினமான இனிய செந்தமிழ் வசன நடையில் பன்னூற்களிலிருந்தும், மேற்கோள் தீட்டி மிக அழகாயும், சமரசமாயும் எழுதப்பெற்றிருப்பதால் முஹம்மதியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முதலிய எல்லாமதஸ்தர்களும் வாங்கி வாசிக்கற்பாலதே. இந்நூலை வாசிக்காதவர்கள் வாஸ்தவத்தில் துர்ப்பாக்கியர்களே! தமிழ்க்கல்வி குன்றிய இக்காலத்தில் இத்தகைய நூல் வெளி வந்துலாவுவதானது தமிழ் நாட்டுக்கு எதிர்பாராத ஓர் பெரிய அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

வேதாந்த பாஸ்கரன் விலை ரூ 1—0—0

யோக ரகசியம் (ஒருபாகம்) விலை அணு 0—6—0

விலாசம்:—மானேஜர், கருணாநிதி வர்த்தகசாலை, ஞானசூரியன் ஆபீஸ்,

விஜயபுரம்—திருவாரூர். S. I. Ry.

...கை ஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி...ர்களால் தமது விஜயபுரம் ...அச்சியந்திரசாலையில் பதிப்பித்துப் பிரசுரிக்கலாயிற்று.